செ.வெ.எண் : 365

நாள் : 18.06.2011

**செய்தி வெளியீடு**

தமிழ்நாட்டில் ஏழு அரசு சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. சட்டக் கல்லூரி முதல்வர் பணியிடம் ஒன்று 2008-ம் ஆண்டு மே மாதம் காலியானது. இந்தக் காலி பணியிடத்தை விரிவுரையாளர் (தெரிவு நிலை) பதவியைக் கொண்டு விதிப்படி நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை எதிர்த்து விரிவுரையாளர் (தெரிவு நிலை) (சட்டமுன் படிப்பு) பதவியையும் முதல்வர் பதவி உயர்வுக்குக் தகுதியாக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டு சென்னை உயர் நீதிமன்றத்தால் 21.7.2008 அன்று இப்பணியிடத்தை நிரப்ப தடை விதிக்கப்பட்டது.

இதன் பின்னர் விரிவுரையாளர் (தெரிவுநிலை) பதவியுடன், விரிவுரையாளர் (தெரிவுநிலை) (சட்ட முன் படிப்பு) பதவியினையும் பதவி உயர்வுக்கு தகுதியான பதவியாக்கி, 12.3.2010–ல் தற்காலிக விதிகள் திருத்தப்பட்டன. இதன் அடிப்படையில், சென்னை உயர் நீதிமன்றம் மேற்சொன்ன தடையாணையை 23.12.2010 அன்று நீக்கியதுடன், நீதிப் பேராணை மனுவையும் தள்ளுபடி செய்தது. இதற்கிடையில், மே 2009 தொடங்கி மேலும் 5 சட்டக் கல்லூரி முதல்வர் பணியிடங்கள் காலி ஏற்பட்டன. மே 2009 முதல் 6 அரசு சட்டக் கல்லூரி முதல்வர் பதவிகளும் நிரப்பப்படாமல் காலியாகவே இருந்தன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பதவியேற்றவுடன், காலியாக இருந்த சட்டக் கல்லூரி முதல்வர் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நிரப்பப்படாமல் இருந்த 6 சட்டக் கல்லூரி முதல்வர் பணியிடங்களை பதவி உயர்வு மூலம் நிரப்பி சட்டத் துறையால் பணி நியமன ஆணை நேற்று (17.6.2011) வெளியிடப்பட்டது.

******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9

நாள் : 18.6.2011